**தலைப்பு 273 – புத்தளம் மாவட்டச் செயலகம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை – 2014 ஆம் ஆண்டு**

---

இந்த அறிக்கையின் 1 ஆம் பந்தி முதல் 2 ஆம் பந்தி வரை மாவட்டச் செயலகத்தின் கணக்குகள் தொடர்பான பொதுத் தகவல்கள் உள்ளடக்கப்பட்டுள்ளதுடன் 3 ஆம் பந்தி முதல் தலைப்பிற்குரிய கணக்காய்வு அவதானிப்புக்கள் காண்பிக்கப்படுகின்றன.

**1. மாவட்டச் செயலகத்தின் கீழுள்ள பிரதேச செயலகங்கள்**

| | | | |
|---|---|---|---|
| (i) | புத்தளம் | (ix) | மஹகும்புக்கடவல |
| (ii) | ஆணமடுவ | (x) | ஆரச்சிக்கட்டுவ |
| (iii) | கறுவலகஸ்வெவ | (xi) | சிலாபம் |
| (iv) | நவகத்தேகம | (xii) | வென்னப்புவ |
| (v) | பள்ளம | (xiii) | நாத்தாண்டிய |
| (vi) | முந்தலம | (xiv) | மஹவெவ |
| (vii) | வனாத்தவில்லு | (xv) | தங்கொட்டுவ |
| (viii) | கற்பிட்டி | (xvi) | மாதம்பை |

**1.1 கணக்காய்வின் நோக்கெல்லை**

புத்தளம் மாவட்டச் செயலகத்தின் 2014 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், இணக்கக்கூற்றுக்கள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றினை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2015 யூலை 23 ஆம் திகதி புத்தளம் மாவட்டச் செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள்

மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள் மற்றும் காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

## 1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்

---

ஒதுக்கீட்டுக் கணக்கு, இணக்கக் கூற்று என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 2. கணக்குகள்

### 2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு

#### (அ) மொத்த நிதி ஏற்பாடும் செலவினமும்

கொழும்பு மாவட்டச் செயலகத்திற்காக செய்யப்பட்டிருந்த மொத்த தேறிய நிதி ஏற்பாடு ரூபா 526.63 மில்லியனாக இருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதி வரையில் அதில் ரூபா 521.41 மில்லியன் தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் மாவட்டச் செயலகத்தின் தேறிய நிதி ஏற்பாடுகளில் சேமிப்பு ரூபா 5.22 மில்லியன் ஆக இருந்ததுடன் அது மொத்தத் தேறிய நிதி ஏற்பாட்டில் 0.99 சதவீதமாக இருந்தது. விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| செலவினம் | 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறானது | | | சேமிப்புக்கள் தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாக |
|---|---|---|---|---|
| | தேறிய நிதி ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | |
| | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | |
| மீண்டெழுபவை | 488.23 | 483.97 | 4.26 | 0.87 |
| மூலதனம் | 38.40 | 37.44 | 0.96 | 2.50 |
| மொத்தம் | **526.63** | **521.41** | **5.22** | 0.99 |

**(ஆ) ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களால் வழங்கப்பட்ட நிதி ஏற்பாட்டைப் பயன்படுத்துதல்**

பல்வேறு செயற்பாடுகளுக்காக 25 அமைச்சுக்களிலிருந்தும் 20 திணைக்களங்களிலிருந்தும் முறையே ரூபா 257.11 மில்லியன் தொகையும் ரூபா 1,087.21 மில்லியன் தொகையுமாக ரூபா 1,344.32 மில்லியன் கூட்டுத்தொகையான நிதிஏற்பாடு வழங்கப்பட்டிருந்தது. அந்த நிதி ஏற்பாட்டில் முறையே ரூபா 230.43 மில்லியன் தொகையும் ரூபா 1,048.80 மில்லியன் தொகையுமாக ரூபா 1,279.23 மில்லியன் கூட்டுத்தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் முறையே ரூபா 26.68 மில்லியன் தொகையும் மற்றும் ரூபா 38.41 மில்லியன் தொகையுமாக ரூபா 65.09 மில்லியன் கூட்டுத்தொகையான நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது.

## 2.2 முற்பணக் கணக்கு

**அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு**

**பாராளுமன்றத்தால் அனுமதிக்கப்பட்ட எல்லைகள்**

மாவட்டச் செயலகத்தின் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகளுக்காக பாராளுமன்றத்தால் அனுமதிக்கப்பட்ட எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| விடய இல. | செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|---|
| | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடியானது | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது |
| | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் |
| 27301 | 45.0 | 39.3 | 33.0 | 30.7 | 168.0 | 143.0 |

## 2.3 பொது வைப்புக் கணக்கு

மாவட்ட செயலகத்தின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வைப்புக் கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 320.37 மில்லியனாக இருந்தது.

## 2.4 கணக்காய்வு அவதானிப்புகள்

2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதியறிக்கைகள் மற்றும் புத்தகங்களின் பிரகாரம், புத்தளம் மாவட்ட செயலகத்தின் ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள் 1.1 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டதன் பிரகாரம் முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட அவதானிப்புக்களின் கீழ் திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தது. அந்த முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புக்களில் பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான அவதானிப்புக்கள் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## 3. தலைப்பு 273 – புத்தளம் மாவட்டச் செயலகம்

## 3.1 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை

மாவட்ட செயலகத்தினால் பின்வரும் பதிவேடுகள் பேணப்படாதிருந்ததுடன் சில பதிவேடுகள் முறையாகவும் நாளதுவரையாகவும் பேணப்படாதிருந்தமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டன.

| | பதிவேட்டு வகை | உரிய பிரமாணம் | அவதானிப்புக்கள் |
|---|---|---|---|
| | ---------------------------- | ------------------- | --------------------------- |
| (அ) | நிலையான சொத்துப் பதிவேடு | 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | கணனி, உபபாகங்கள் மற்றும் மென்பொருள் தொடர்பான நிலையான சொத்துப் பதிவேடு | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | பேணப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | கணக்காய்வு ஐயவினா பதிவேடு | நிதிப் பிரமாணம் 452(1) | நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | காசுப் புத்தகம் | நிதிப் பிரமாணம் 446 | ஆரச்சிக்கட்டுவ மற்றும் கறுவலகஸ்வெவ பிரதேச செயலகங்களில் நாளதுவரையாகப் பேணப்பட்டிருக்கவில்லை. |
| (உ) | திணைக்களத்தின் ஒதுக்கீட்டுப் (அனுமதிக்கப்பட்ட செலவு) பேரேடு | நிதிப் பிரமாணம் 447 | புத்தளம் மாவட்ட செயலகம் மற்றும் நாத்தாண்டிய பிரதேச செயலகம் என்பவற்றில் நாளதுவரையாகப் பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ஊ) | இருப்புப் புத்தகம் | நிதிப் பிரமாணம் 751 மற்றும் 763 | நாளதுவரையாகப் பேணப்பட்டிருக்கவில்லை. |
| (எ) | பிணைப் பதிவேடு | நிதிப் பிரமாணம் 891(1) | நாளதுவரையாகப் பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ஏ) | மின்சார உபகரணங்கள் பதிவேடு | நிதிப் பிரமாணம் 454(2) | பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ஐ) | இழப்புக்கள் தொடர்பான பதிவேடு | நிதிப் பிரமாணம் 110 | நாளதுவரையாகப் பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ஒ) | பொறுப்புக்கள் தொடர்பான பதிவேடு | நிதிப் பிரமாணம் 214 | பேணப்பட்டிருக்கவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| (ஓ) | வாகன சம்பவத் திரட்டுப் புத்தகம் | நிதிப் பிரமாணம் 1645(அ) | நாளதுவரையாகப் பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ஔ) | வாகன பட்டியல்படுத்தல் பதிவேடு | நிதிப் பிரமாணம் 1647(உ) | நாளதுவரையாகப் பேணப்பட்டிருக்கவில்லை. |
| (க) | கடன் மற்றும் முற்பணப் பதிவேடு | 1994 ஆகஸ்ட் 10 ஆந் திகதிய 96 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 9(1) ஆம் பந்தி | கடன் மற்றும் முற்பணப் பதிவேடு பேணப்படாதிருந்ததுடன் கடன் பதிவேடு சில பிரதேச செயலகங்களில் நாளதுவரையாக்கப் பட்டிருக்கவில்லை. |
| (கா) | கொள்வனவுக் குழுவினதும் தொழில்நுட்ப மதிப்பிட்டுக் குழுவினதும் வருகை தொடர்பான பதிவேடு | அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 2.11.2 ஆம் வழிகாட்டி | பேணப்பட்டிருக்கவில்லை. |
| (கி) | குழுக் கூட்ட அறிக்கைகள் | அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 2.11.3 ஆம் வழிகாட்டி | பேணப்பட்டிருக்கவில்லை. |
| (கீ) | கேள்வி கோரல் பதிவேடு | அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 5.2.1 ஆம் வழிகாட்டி | பேணப்பட்டிருக்கவில்லை. |

### 3.2 கணக்காய்வு ஐயவினாக்களுக்கு பதிலளித்தல்

-----------------------------------------------------------------------------------

மாவட்ட செயலகத்திற்கு மீளாய்வாண்டின் போது சமர்ப்பிக்கப்பட்ட 12 கணக்காய்வு ஐயவினாக்களுக்கும் முன்னைய ஆண்டுகளின் போது வழங்கப்பட்ட 03 கணக்காய்வு ஐயவினாக்களுக்கும் 2015 மார்ச் 31 ஆந் திகதி வரையிலும் பதிலளிக்கப்பட்டிராததுடன் அந்த ஐயவினாக்களுக்குரியதாக கணிப்பீடு செய்யக்கூடிய கொடுக்கல் வாங்கல்களின் பெறுமதி ரூபா 77,723,234 ஆகும்.

### 3.3 எல்லைகள் பிற்பற்றப்படாமை

27301 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கின் ஆகக் குறைந்த பெறுவனவு எல்லை ரூபா 33,000,000 ஆக இருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளபடியான பெறுவனவுகள் ரூபா 30,737,538 ஆக இருந்தது. அதன்படி ரூபா 2,262,462 இனால் ஆகக் குறைந்த பெறுவனவு எல்லை அடையப்பட்டிருக்கவில்லை.

### 3.4 ஒதுக்கீட்டுக் கணக்கு

#### 3.4.1 பாதீட்டு முரண்

07 செலவின விடயங்களுக்கு மிகை ஏற்பாடு ஒதுக்கப்பட்டமையின் காரணமாக நிதியேற்பாட்டைப் பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்பு அந்த செலவின விடயங்களுக்குரிய தேறிய நிதியேற்பாட்டில் 8 சதவீதத்திற்கும் 72 சதவீதத்திற்கும் இடையிலான வீச்சில் காணப்பட்டது.

#### 3.4.2 ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களினால் வழங்கப்பட்ட நிதியேற்பாட்டின் பயன்பாடு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நீதி அமைச்சினால் வழங்கப்பட்ட நிதியேற்பாடுகளின் அளவு ரூபா 564,898 இனால் விஞ்சி பயன்படுத்தப்பட்டிருந்தது.

(ஆ) கைத்தொழில் மற்றும் வணிக அலுவல்கள் அமைச்சினால் வழங்கப்பட்ட ரூபா 35,212 தொகையான நிதியேற்பாடுகள் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் மாவட்ட செயலகத்தினால் உரிய பணிகளுக்காக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) அமைச்சொன்றிலிருந்தும் இரண்டு திணைக்களங்களிலிருந்தும் வழங்கப்பட்ட நிதியேற்பாடுகளிலிருந்து பயன்படுத்தப்பட்டதன் பின்னர் சேமிப்பு அந்த நிதியேற்பாடுகளில் 65 சதவீதமாக இருந்தது.

(ஈ) 11 அமைச்சுக்களிலிருந்தும் 14 திணைக்களங்களிலிருந்தும் வழங்கப்பட்ட நிதியேற்பாடுகளிலிருந்து பயன்படுத்தப்பட்டதன் பின்னர் சேமிப்பு 05 சதவீத அளவை விஞ்சியிருந்தது.

### 3.5 கட்டுநிதிக் கணக்கு

------------------------------

மாதம்பை மற்றும் பள்ளம பிரதேச செயலகங்களின் மூன்று உத்தியோகத்தர்களுக்கு நிதிப்பிரமாணம் 371 இற்கு இணங்காமல் ரூபா 20,000 எல்லையினை விஞ்சி ரூபா 170,800 தொகையான செயல்நிமித்த உபகட்டுநிதி 3 சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்டிருந்தன.

### 3.6 பொது வைப்புக் கணக்கு

------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2 வருடங்களை விஞ்சிய ரூபா 25,999,981 கூட்டுத்தொகையான வைப்புக்கள் தொடர்பாக நிதிப் பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மாவட்ட செயலகம் மற்றும் ஆரச்சிக்கட்டுவ, பள்ளம மற்றும் ஆனமடுவ பிரதேச செயலகங்களுக்கு வழங்கப்பட்ட ரூபா 21,003,774 தொகையான நிதிஏற்பாடுகள் உரிய செயற்பணிகளை நிறைவேற்ற பயன்படுத்தப்படாது வைப்புக்கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

### 3.7 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக் கூற்று

------------------------------------------------------------------------------------------------------------------------------------

27301 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பாக 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட இணக்கக் கூற்றுக்களின் படி அத்திகதியில் உள்ளவாறு அறவீடுகள் நிலுவையாக இருந்த மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 7,468,973 ஆக இருந்ததுடன் அந்த நிலுவை மீதிகள் 01 வருடம் முதல் 05 வருடங்கள் வரையிலான காலத்தை விஞ்சி கொண்டுவரப்பட்டிருந்த போதிலும்,

அந்த நிலுவைக் கடன் மீதியினை அறவிடுவதற்கான பின்தொடர் நடவடிக்கைகள் நலிவான நிலையில் காணப்பட்டது.

(ஆ) மாவட்ட செயலகத்தினால் இடர் கடன் செலுத்தும் போது 2008 திசெம்பர் 31 ஆந் திகதிய 30/2008 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் ஏற்பாடுகள் பின்பற்றப்படாது ரூபா 2,423,726 தொகையான இடர்கடன் உத்தியோகத்தர்களுக்குச் செலுத்தப்பட்டிருந்தது.

## 3.8 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

### 3.8.1 உள்ளகக் கணக்காய்வு

உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் மூலம் மீளாய்வாண்டின் போது மாவட்டத்தின் 16 பிரதேச செயலகங்களுக்குரியதாக 18 உள்ளகக் கணக்காய்வு ஐய வினாக்கள் வழங்கப்பட்டிருந்த போதிலும் மாவட்ட செயலகத்திற்காக கணக்காய்வு ஐயவினா வழங்கப்பட்டிருக்கவில்லை.

### 3.8.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு காலாண்டிற்கு ஒரு கூட்டம் வீதம் வருடமொன்றிற்கு 04 கூட்டங்கள் நடாத்தப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டில் 02 கூட்டங்கள் மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தன.

## 3.9 சொத்துக்கள் முகாமைத்துவம்

மாவட்ட செயலகத்தின் சொத்துக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

கீழே வகைப்படுத்தப்பட்டதன் பிரகாரம் சில சொத்துக்கள் விளைவற்று அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்டிருந்தமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டது.

| சொத்துக்களின் வகை | அலகுகளின் எண்ணிக்கை | விளைவற்று அல்லது குறைவான பயன்பாட்டுடன் காணப்பட்ட காலப்பகுதி |
|---|---|---|
| | | ஆண்டு |
| (i) கட்டிடங்கள் | 02 | 01 வருடத்திற்கு மேல் |
| (ii) மோட்டார் வாகனம் | 01 | 01 வருடத்திற்கு மேல் |
| (iii) இயந்திரங்கள் | 07 | 01 வருடத்திற்கு மேல் |
| (iv) ஏனைய சொத்துக்கள் (துவிச்சக்கர வண்டி) | 01 | 01 வருடத்திற்கு மேற்பட்டதும் 04 வருடங்களுக்குக் குறைவானதும் |

(ஆ) தீர்க்கப்படாத பொறுப்புக்கள்

மாவட்ட செயலகத்தினால் 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு வருடமொன்றிற்குக் குறைந்த காலமாகக் கொண்டுவரப்படுகின்ற ரூபா 1,035,819 தொகையான தீர்க்கப்படாத பொறுப்புக்கள் காணப்பட்டன.

## 3.7 இணங்காமைகள்

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமைகள்**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுக்கு இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து தரப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமைகள் |
|---|---|---|
| | ரூபா | |
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் | | |
| (i) நிதிப் பிரமாணம் 109 | 2,701,315 | புத்தகங்களிலிருந்து பதிவழிக்கப்படாத 2 நட்டங்களும் இழப்புக்களும் மற்றும் |

| | | | |
|---|---|---|---|
| | | | வனாத்தவில்லு பிரதேச செயலகத்தில் 2004/2005 பெரும்போக, 2005 சிறுபோகம் மற்றும் 2005/2006 பெரும்போகம் மற்றும் கருவலகஸ்வெவ பிரதேச செயலகத்தில் 2004/2005 பெரும்போக மற்றும் 2005 சிறுபோகங்களில் தீர்க்கப்படாத முற்பணங்களின் நட்டம் ஒதுக்கீட்டுக் கணக்கில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) | நிதிப் பிரமாணம் 110 | 2,485,367 | 22 இழப்புக்களின் தகவல்கள், நட்டங்கள் இழப்புக்களுக்கான பதிவேட்டில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (iii) | நிதிப் பிரமாணம் 396 | 32,384 | கொடுப்பனவிற்குச் சமர்ப்பிக்கப்படாத 06 மாதங்களை விஞ்சிய 10 காசோலைகள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (iv) | நிதிப் பிரமாணம் 571 | 25,315,735 | பொது வைப்புத் தொடர்பாக அரையாண்டு விபரம் சமர்ப்பிக்கப்பட்டிராததுடன் மாவட்ட செயலகத்திலும் 08 பிரதேச செயலகங்களிலும் 2 வருடங்களை விஞ்சிய வைப்புக்கள் தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (v) | நிதிப் பிரமாணம் 1645 மற்றும் 1646 | - | மாவட்ட செயலகத்தின் 07 குழாம் வாகனங்களின் நாளாந்த ஓட்ட அட்டவணைகள் மற்றும் மாதாந்த பொழிப்புக்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |

(ஆ) பொது நிர்வாகச் சுற்றறிக்கைகள்

-------------------------------------------

| | | | |
|---|---|---|---|
| (i) | 2011 பெப்ரவரி 09 ஆந் திகதிய 13/2008(IV) ஆம் | - | 04 குழாம் வாகனங்களின் நாளாந்த ஓட்ட அட்டவணைகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |

இலக்க சுற்றறிக்கையின் மூலம் திருத்தப்பட்ட 2008 யூன் 29 ஆந் திகதிய 13/2008 ஆம் இலக்க சுற்றறிக்கை

| | | | |
|---|---|---|---|
| (ii) | 2013 யூலை 04 ஆந் திகதிய 14/2013 ஆம் இலக்க சுற்றறிக்கை | - | சுற்றறிக்கையின் ஆலோசனைகளுக்கு முரணாக முகாமைத்துவ உதவி உத்தியோகத்தரின் கடமைச் செயற்பாடுகள் அபிவிருத்தி உத்தியோகத்தருக்குக் கையளிக்கப்பட்டிருந்தது. |

### 3.11 வெளிநாட்டுதவிச் செயற்திட்டம்

-------------------------------------------------

ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் புத்தளம் மாவட்ட செயலகத்தின் வங்கிக் கணக்கிற்கு 2014 திசெம்பர் 12 ஆந் திகதி ரூபா 10,118,500 வெளிநாட்டுதவி பணம் கிடைத்திருந்தது. இந்தப் பணம் சரியாக இனங்காணப்படாது 2015 மார்ச் வரை வங்கிக்கணக்கிணக்கக் கூற்றுக்களில் இனங்காணப்படாத பெறுவனவாகக் குறிப்பிடப்பட்டிருந்ததுடன் 2015 ஏப்ரல் மாதம் வரையான தாமதத்தின் பின்னர் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

### 3.12 உள்நாட்டு நிதியீட்டத்தின் மூலம் செயற்திட்டங்களை அமுல்படுத்துதல்

--------------------------------------------------------------------------------------------------------------------

செயற்திட்டங்களை ஆரம்பிக்காது கைவிடல், செயற்திட்டங்களை பூர்த்தி செய்யாது கைவிடல் மற்றும் செயற்திட்டத்தின் தாமதங்கள் தொடர்பாக தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையில் வெளிப்படுத்தப்பட்ட சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

(அ) செயற்திட்டங்களை ஆரம்பிக்காது கைவிடல்

---------------------------------------------------------------------------

மாவட்ட செயலகத்தின் கீழுள்ள 06 பிரதேச செயலகங்களினால் ரூபா 12,172,212 கூட்டுத்தொகையான மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதியில் 108 செயற்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) செயற்திட்டங்களை பூர்த்தி செய்யாது கைவிடல்

-----------------------------------------------------------------------------

மாவட்ட செயலகத்தின் கீழுள்ள 02 பிரதேச செயலகங்களில் 46 செயற்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டு அதற்காக ரூபா 18,747,067 தொகை செலவிடப்பட்டிருந்தது. பின்னர் அந்த செயற்திட்டங்கள் பூர்த்தி செய்யப்படாது கைவிடப்பட்டிருந்தன.

(இ) செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதம்

-----------------------------------------------------------------------------

மாவட்ட செயலகத்தின் கீழுள்ள 08 பிரதேச செயலகங்களினால் ரூபா 220,777,022 கூட்டுத்தொகையான மதிப்பிடப்பட்ட கிரயமான 414 செயற்திட்டங்கள் குறிப்பிட்ட காலப்பகுதியில் பூர்த்திசெய்யப்பட்டிருக்கவில்லை. அந்த செயற்திட்டங்களுக்காக 2014 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் ரூபா 51,076,186 கூட்டுத்தொகை செலவிடப்பட்டிருந்தது. அந்த செயற்திட்டங்களை பூர்த்தி செய்வதற்காக 01 மாதம் முதல் 06 மாதங்கள் வரையான காலம் தாமதிக்கப்பட்டிருந்தது.

## 3.13 போதியளவில் நிறைவேற்றப்படாத பிரதான பணிகள்

-----------------------------------------------------------------------------

மாவட்ட செயலகத்தின் கீழுள்ள பின்வரும் பிரதேச செயலகங்களினால் பிரதான செயற்பாடுகள் போதியளவில் நிறைவேற்றப்படாதிருந்த சில சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) வனாத்தவில்லு பிரதேச செயலகத்தினால் மைக்குளம் ஆயுர்வேத நிலையத்தில் வைத்தியர் விடுதியொன்றை நிர்மாணிப்பதற்கு ரூபா 674,194 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும் அதன் கதவின் பலகையின் பகுதியொன்று கதவிலிருந்து பிரியும் அளவில் வெடித்திருந்தது.

(ஆ) பள்ளம பிரதேச செயலகப் பிரிவில் ரூபா 23,106,246 கூட்டுத்தொகையான மதிப்பிடப்பட்ட பெறுமதியில் உள்ள 10 நீர் செயற்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும், அவற்றின் வேலை பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. அந்த செயற்திட்டங்களுக்காக மீண்டும் நிதியேற்பாடு கிடைக்காமையினால் 2014 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அந்த செயற்திட்டத்தை பூர்த்தி செய்வதற்கு முடியாதிருந்தது.

## 3.14 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

சுற்றுலா தளமொன்றை அமைப்பதற்காக கற்பிட்டியில் 14 தீவுகளின் காணிகளை சுவீகரிப்பதற்கு கற்பிட்டி இலங்கை வங்கிக் கிளையில் ரூபா 31 மில்லியன் வைப்புச் செய்யப்பட்டிருந்த போதிலும் அது அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 3.15 அதிகாரமின்றிய கொடுக்கல் வாங்கல்கள்

மாவட்ட செயலகத்தினால் அதிகாரமின்றி பின்வரும் கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(அ) 2013 பெப்ரவரி 11 ஆந் திகதிய MFD/S/S/1 ஆம் இலக்க நிதி அமைச்சுச் செயலாளரின் சுற்றறிக்கைக்கு முரணாக பள்ளம பிரதேச இணைப்புக் குழுவிற்காக ரூபா 152,540 தொகை செலவில் உபகரணங்கள் வழங்கப்பட்டிருந்தது.

(ஆ) பொருளாதார அபிவிருத்தி அமைச்சுச் செயலாளரின் அங்கீகாரமின்றி அந்த அமைச்சின் நிதிஏற்பாடுகளிலிருந்து பள்ளம பிரதேச செயலகத்தினால் நிறைவேற்றப்பட்ட வேலைகளின் நிர்வாகச் செலவனங்களிலிருந்து ரூபா 515,994 பெறுமதியான மூலதனப் பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது.

(இ) சில செயற்திட்டங்களுக்கு வழங்கப்பட்ட ரூபா 400,000 தொகையான நிதிஏற்பாடு அங்கீகாரமின்றி வேறு செயற்திட்டங்களுக்கு பயன்படுத்தப்பட்டிருந்தது.

(ஈ) நாத்தாண்டிய பிரதேச செயலகப் பிரிவில் 03 அறநெறிப் பாடசாலைக் கட்டிடங்களை நிர்மாணிப்பதற்காக ரூபா 300,000 கூட்டுத்தொகையான நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்த போதிலும், முறையான அங்கீகாரமின்றி வேறு செயற்திட்டங்களுக்காக அந்த நிதியேற்பாடு பயன்படுத்தப்பட்டிருந்தது.

## 3.16 நிதிமோசடி வடிவிலான கொடுக்கல் வாங்கல்கள்

கற்பிட்டி பிரதேச செயலகப் பிரிவில் சுற்றாடல் மற்றும் சிறுவர் பூங்காவொன்றை நிர்மாணிக்கும் போது அதன் அத்திவாரத்திற்கு கிரவல் நிரப்பப்படாமல் ரூபா 152,544 தொகை வழங்கப்பட்டிருந்தது.

**3.17 முகாமைத்துவ நலிவுகள்**

---

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது பின்வரும் நலிவுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) வனாத்தவில்லு, நவகத்தேகம மற்றும் கற்பிட்டி பிரதேச செயலகங்களிலிருந்து கிராமிய தொண்டர் அமைப்புக்களுக்கிடையே பகிர்ந்தளிப்பதற்காக கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 3,657,415 பெறுமதியான அபிவிருத்திப் பொருட்கள் 2015 மார்ச் மாத இறுதி வரையிலும் அந்த பொருட்கள் உரிய அமைப்புக்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நவகத்தேகம பிரதேச செயலகத்தினால் 2014 திசெம்பர் மாதத்தின் போது எழுதிக் கையொப்பமிடப்பட்ட ரூபா 140,875 பெறுமதியான 33 காசோலைகள் உரிய நபர்களுக்கு கையளிக்கப்படாது 2015 மே மாதம் வரையிலும் வைக்கப்பட்டிருந்தது.

## 3.18 மனித வளங்கள் முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியும் உள்ளபடியான பதவியணியும்**

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறாகும்.

| | ஊழியர்களின் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 55 | 49 | 06 | - |
| (ii) | மூன்றாம் நிலை | 34 | 15 | 19 | - |
| (iii) | இரண்டாம் நிலை | 1,101 | 971 | 130 | - |
| (iv) | ஆரம்ப நிலை | 172 | 159 | 13 | - |
| (v) | ஏனையவை (ஒப்பந்த அடிப்படை) | - | 04 | - | 04 |
| | மொத்தம் | 1,362 | 1,198 | 168 | 04 |

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

ஆட்சேர்க்கப்பட்டிருந்த மிகையான பதவியணியினர் தொடர்பாக முறையான அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்கு மாவட்ட செயலகம் தவறியிருந்தது.